**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதாகும் -

(அ) பிரிவு 1 தவிர, முதன்மைச் சட்டவாக்கத்தின் மற்றெல்லா ஏற்பாடுகளும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியில் அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதல்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவின் நீக்கப்பட்ட (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள் மூலம் ஏலவே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளவையாகவுள்ள, பாகங்கள் V, VI, VIII, IX மற்றும் X என்பவற்றின்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதுவும் செல்லுபடியானதாகவும் தொடர்ந்தும் வலுவிலுள்ளதாகவும் இருத்தல்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் அப்பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் அது 11 ஆம் வாசகத்தின்மூலம் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையுமாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதுமாகும் -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 13, 14, 15, 16 அல்லது 18 ஆம் பிரிவின்கீழ், தரவுடன் தொடர்புபட்டவரிடமிருந்து ஒரு கட்டுப்பாட்டாளரினால் பெறப்பட்ட கோரிக்கையொன்று தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஆ) குறித்தசில சூழ்நிலைகளிற்றவிர அத்தகைய கோரிக்கை கட்டணமேதுமின்றி கட்டுப்பாட்டாளரினால் இணங்கியொழுகப்பட வேண்டும்.

**வாசகம் 5** : இவ்வாசகம். முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அரசியலமைப்பின் கீழான தரவுடன் தொடர்புபட்டவரொருவரின் உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் அத்துடன் அவற்றுக்கு மேலதிகமாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான அத்தகைய உரிமைகளிலும் சுதந்திரங்களிலும் தாக்கமொன்றை உருவாக்குவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளதும், தன்னியக்கமாக்கப்பட்ட செயன்முறைப்படுத்தலின் அடிப்படையிலமைகின்றதுமான கட்டுப்பாட்டாளரின் முடிபொன்றைப் பரிசீலனை செய்யும்படி அத்தகைய கட்டுப்பாட்டாளரிடம் கோருவதற்கு அத்தகைய தரவுடன் தொடர்புபட்டவருக்குள்ள உரிமைக்கு ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 13 ஆம் பிரிவின்கீழ் தனிப்பட்ட தரவுக்குரிய அணுகலை வழங்குவதற்கும் மற்றும் 14(1) ஆம் பிரிவின்கீழ் சம்மதத்தின் மீளப்பெறுதலை அனுமதிப்பதற்குமான மறுப்பொன்று தொடர்பில் அதிகாரசபைக்கு மேன்முறையீடு செய்வதற்கு தரவுடன் தொடர்புபட்டவரொருவரை இயல்விப்பதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவாகும்:-

(அ) செயன்முறைப்படுத்துகையானது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் நிறைவேற்றப்படுகின்றவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரைப் பெயர்குறிப்பதற்கான அல்லது நியமிப்பதற்கான தேவைப்பாட்டை இல்லாம லாக்குதல்; அத்துடன்

(ஆ) கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் நிறைவேற்றப் படும் முக்கிய செயன்முறைப்படுத்தற் செயற்பாடுகள் தரவுடன் தொடர்புபட்ட வர்களின் உரிமைகளைப் பாதிக்கின்றதும் தீங்கேற்படுத்தும் ஆபத்தை விளைவிக்கின்றதுமான செயன்முறைப்படுத்தலின் வகுதிகளைக் கொண் டுள்ளவிடத்து, தரவுப் பாதுகாப்பு அலுவலரொருவரை நியமிப்பதற்கான அல்லது பெயர்குறிப்பதற்கான தேவைப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தல்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது அதிகாரசபையின் எழுத்திலான கோரிக்கையொன்றின்மேல் மாத்திரம் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புத் தாக்க மதிப்பீடொன்று அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன் பின்வருவனவாகும் -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட தரவுடன் தொடர்பு பட்டவர்களின் உரிமைகளுக்குத் தீங்கேற்படுத்தும் ஆபத்துத் தொடர்பில் அப்பிரிவின் ஏற்புடைமையை மட்டுப்படுத்துதல்; அத்துடன்

(ஆ) அதன் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிடுதல்.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது எல்லைக்கப்பாலான தரவோட்டங்களில் ஈடுபடுகின்ற ஒரு கட்டுப்பாட்டாளரினால் அல்லது செய்முறைப்படுத்துநரினால் இணங்கியொழுகப்படவேண்டிய தேவைப்பாடு களைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பில் வழிகாட்டுநெறிகளை ஆக்குவதற்கு அதிகாரசபையை இயல்விக்கும் வகையில் முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ எனும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

**வாசகம் 12** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியை நீக்குவதன்மூலம் அப்பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், அது வாசகம் 10 மற்றும் வாசகம் 13 என்பவற்றினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளைவாந்தன்மையுமாகும்.

**வாசகம் 13** : இவ்வாசகம், "தரவுப் பாதுகாப்பு அலுவலர்", "பகிரங்க அதிகாரசபை" மற்றும் "மூன்றாம் நாடு" எனும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை மாற்றீடுசெய்வதன்மூலம் 56 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 14** : இவ்வாசகம், அதிகாரசபையின் சபைக் கூட்டங்கள் அதிகாரசபையின் தவிசாளரினால் அழைக்கப்படுவதை இயலச்செய்யும் வகையில் முதன்மைச் சட்டவாக்கத் துக்கான அட்டவணை VI ஐத் திருத்துகின்றது.

